(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUCHENGODE
**CC.No.246/2019**

Deposition of Prosecution/Defence/Court Witness for.PW. 1

Name : கணேசன்

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act of 1969) on the day of 28.07.2021.

முதல் விசாரணை:

நான் போக்கம்பாளையத்தில் குடியிருக்கிறேன். கெமிக்கல்ஸ் கடை வைத்துள்ளேன். ஆஜர் எதிரி மகேந்திரனைத் தெரியும். எதிரி கன்னியப்பனை தெரியும். அவரை பார்த்தால் அடையாளம் காட்ட முடியும். 27.10.2018 ம் தேதி காலை 10.00 மணி சுமாருக்கு திருச்செங்கோடு கிழக்கு ரத வீதியில் உள்ள எனக்கு சொந்தமான கட்டிடத்தில் நானும், மோகன், கோபால், வடிவேல், ரமேஷ் ஆகியோர் இருந்தோம். அந்த கட்டிடத்திற்கு நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட ஆணையர் முனிராஜ் அவர்கள் எங்கள் நிலத்தை பார்வையிடுவதற்காக எனது வழக்கறிஞர் குணசேகரன் மற்றும் சர்வேயருடன், விஏஓ, போலிசார் ஆகியோர் வருவார்கள் என்று நாங்கள் முதலில் சென்றிருந்தோம். நாங்கள் செல்லும் போது கன்னியப்பனும், மகேந்திரனும் கட்டிடத்தின் அருகே நின்று கொண்டிருந்தார்கள். நாங்கள் சென்று பார்த்த போது என்னுடைய கட்டிடத்தின் கதவு, நிலவுகள் உடைக்கப்பட்டிருந்தன. நான் அதை பார்த்துக் கொண்டிருந்த போது எதிரிகள் இருவரும் கமிஷனர் வந்து அளப்பதற்கு காரணமே நீதான் என்று கூறி தேவடியா கண்டாரஓலி பையனே என்று கெட்ட வார்த்தைகளால் இருவரும் திட்டினார்கள். மகேந்திரன் என்னை வெட்டுவதற்காக அருவாளை எடுத்துக்கொண்டு வந்தார். அதை பார்த்த மோகனும், கோபாலும் மகேந்திரனை தடுத்துவிட்டார்கள். கன்னியப்பன் எந்த போலிஸ் வந்தாலும், கமிஷனர் வந்தாலும் நான் அளக்க விடமாட்டேன் என்று சொன்னார். பின்னிட்டு அரை மணி நேரத்தில் கமிஷனர், எனது வழக்கறிஞர் குணசேகரன், சர்வேயர், விஏஓ, போலிசார் வந்தார்கள். வந்தவர்களிடம் எதிரிகள் இருவரும் இடத்தை அளக்கக்கூடாது என்று பிரச்சினை செய்தார்கள். அதை ரமேஷ் மொபைல் வீடியோவாக பதிவு செய்தார். அதை பார்த்த கன்னியப்பன் ரமேஷை அறைந்து கீழே தள்ளிவிட்டார். ரமேஷையும் கெட்ட வார்த்தையால் பேசினார்கள். 2 வது எதிரி ரமேஷை தள்ளிவிட்டு அருவாள் எடுத்து வெட்ட வந்தார்.

அங்கிருந்தவர்கள் அவரை விலக்கிவிட்டார்கள். அதன் பின்னிட்டு1 வது எதிரி அங்கிருந்தவர்களை கெட்ட வார்த்தையால் திட்டிவிட்டு அளந்துட்டு போங்கடா என்று சொன்னார். அதன் பிறகு கமிஷனர் , சர்வேயர் உதவியுடன் இடத்தை பார்வையிட்டு சென்றார். காயம் எதுவும் இல்லாததால் நாங்கள் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் 27.10.2018 தேதியிட்ட புகார் நான் கொடுத்தது தான். புகாரில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். புகார் அ.சா.ஆ.1. 31.10.2018 அன்று போலிசார் காவல் நிலையத்திற்கு அழைத்து என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை.-

இந்த வழக்கு சம்பவம் என்னிக்கு நடந்தது என்றால் 27.10.2018 அன்று நடந்தது. சம்பவ சமயத்தில் சம்பவ இடத்தில் போலிசார் இருந்தார்கள் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் முனிராஜ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அறிக்கையில் பாதுகாப்பு கோரி சம்பவ இடத்தில் நான்கு போலிசார்கள் பாதுகாப்புக்காக இருந்ததாக குறிப்பிட்டுள்ளார். அவ்வாறு போலிசார் சம்பவ இடத்தில் இருந்த போது எதிரிகள் அருவாளை எடுத்துவெட்ட வந்திருந்தால் சம்பவ இடத்திலேயே எதிரிகளை போலிசார் கைது செய்திருப்பார்கள் என்றால் சரியல்ல. நான் 27.10.2018 தேதியிட்டு கொடுத்த புகாரில் போலிசார் சிஎஸ்ஆர் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டார்கள் என்றால் சரிதான். நான் எனது புகாரில் சம்பவ இடத்தில் சம்பவ சமயத்தில் போலிசார் இருந்ததாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. சம்பவ இடம் மெயின் ரோட்டில் அமைந்துள்ளதென்றால் சரிதான். அந்த இடம் கடைகள் மிகுந்த பகுதி என்றால் சரிதான். ஆட்கள் நிறைந்த பகுதியில் ஒருவர் அருவாளை எடுத்து வெட்ட வரும் போது அங்கிருந்தவர்கள் தடுத்தார்கள் என்றால் சரிதான். எதிரிகள் எங்களை வெட்ட வரும் போது மோகன் , ரமேஷ், கோபால் ஆகியோர் தடுத்தார்கள். நான் எனது முதல் விசாரணையில் ரமேஷ் வீடியோ எடுத்த போது 2 வது எதிரி அவரை அடித்து தள்ளிவிட்டதாக சொல்லியுள்ளேன். அவ்வாறு செய்த போது போலிசார் அவரை சம்பவ இடத்தில் கைது செய்யவில்லையா என்றால் எச்சரித்தார்கள். கைது செய்யவில்லை. 2 வது எதிரி அருவாளை எடுத்து வருவதாக நான் சொல்வது வீடியோவில் பதிவாகியுள்ளதா என்றால் நாங்கள் அதை வீடியோ எடுக்கவில்லை. ஆணையர் கட்டிடத்தை சர்வேயர் உதவியுடன் பார்வையிட்டு அளந்து முடித்துவிட்டார் என்றால் சரிதான்.

மறுவிசாரணை.- இல்லை.

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUCHENGODE
**CC.No. 246/2019**

Deposition of Prosecution/Defence/Court Witness for.PW. 2

| | | |
|---|---|---|
| Name | : | கோபால் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act of 1969) on the day of 28.07.2021.

முதல் விசாரணை:

நான் போக்கம்பாளையத்தில் குடியிருக்கிறேன். கெமிக்கல் கடையில் வேலை செய்கிறேன். அ.சா.1 ஐ தெரியும். எனது ஓனர். ஆஜர் எதிரி மகேந்திரனைத் தெரியும். எதிரி கன்னியப்பனை தெரியும், பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். 27.10.2018ம் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு திருச்செங்கோடு பெரியதேர் அருகே பூக்கடை வீதியில் அ.சா.1ன் கட்டிடத்தை அளப்பதற்காக ஆட்கள் வருவதாக எனது ஓனர், ரமேஷ், மோகன், வடிவேல் ஆகியோருடன் பேசிக்கொண்டிருந்தார். நானும் அ.சா.1 உடன் கட்டிடத்திற்கு சென்றிருந்தேன். நாங்கள் அங்கு சென்றபோது அந்த கட்டிடத்தில் ஜன்னல் , கதவுகள் உடைக்கப்பட்டிருந்தது. நாங்கள் அதை பார்ப்பதற்காக அருகில் சென்றோம். அப்போது ஆஜர் எதிரி மகேந்திரன் அ.சா.1 ஐ தேவடியா பையலே உன்னால்தான்டா பிரச்சினை என்று கெட்ட வார்த்தைகளால் திட்டினார். கொடுவா வைத்து அ.சா.1 ஐ வெட்ட வந்தார். நானும், மோகனும் எதிரி மகேந்திரனை தடுத்தோம். ஒரு 5 நிமிடங்களில் அளப்பதற்காக போலிசார் மற்ற ஆட்களும் வந்தார்கள். அவர்களை பார்த்ததும் எதிரிகள் அமைதியாகிவிட்டார்கள். அளக்கும் போது ஆஜர் எதிரியும், அவரது அப்பா கன்னியப்பனும் அளப்பவர்களை அசிங்கமான வார்த்தைகளால் திட்டிக்கொண்டிருந்தார்கள். அ.சா.1 ஐயும் திட்டினார்கள். அப்போது ரமேஷ் அண்ணன் போனில் பதிவு செய்தார். வீடியோவாக எடுத்தாரா, போட்டோ எடுத்தாரா என்று எனக்கு தெரியாது. 1வது எதிரி கன்னியப்பன் ரமேஷை போட்டோ எடுக்கறியா என்று கையால் கன்னத்தில் அடித்து கீழே தள்ளிவிட்டார். போன் கீழே விழுந்துவிட்டது. ஆஜர் எதிரி, ரமேஷை கீழே தள்ளிவிட்டார். மறுபடியும் கெட்ட வார்த்தைகளால் ரமேஷையும், ஓனரையும் உன்னை கொல்லாமல் விடமாட்டோம், வெட்டாமல் விடமாட்டோம் என்று கெட்ட வார்த்தைகளால் திட்டிக்கொண்டிருந்தார். அருகில் இருப்பவர்கள் போலிஸ் இருக்கிறார்கள் அமைதியாக இரு என்று

சொன்னபோது போலிஸ் இருந்தா என்ன, யார் இருந்தா என்ன உன்னை வெட்டாமல் விடமாட்டேன் என்று சொன்னார். சிறிது நேரத்தில் நான் அங்கிருந்து கிளம்பி விட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை.-

போலிசார் வந்த பிறகு சம்பவ இடத்திற்கு எதிரிகள் அருவாள் எடுத்து வந்தார்களா என்றால் எனக்கு தெரியாது. எனது கடைக்கும், சம்பவ இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் நடந்து போனால் 5 நிமிடத்தில் போகலாம். எதிரிகள் அருவாளை எடுத்துவெட்ட வரும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் காலை 10.00 மணி இருக்கும். பூக்கடை வீதியில் காலை 10.00 மணிக்கு ஆட்கள் நடமாட்டம் அதிகமாக இருக்குமென்றால் சரிதான். நாங்கள் சம்பவ இடத்திற்கு சென்று எவ்வளவு நேரத்தில் விஏஓ, கமிஷனர்,போலிசார் அங்கு வந்தார்கள் என்றால் 5 அல்லது 10 நிமிடங்களில் வந்திருப்பார்கள். சம்பவத்தை போலிசார் தடுக்கவில்லையா என்றால் அமைதியாக இருக்குமாறு சொன்னார்கள். எத்தனை போலிசார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் எண்ணவில்லை. மேற்படி கட்டிடத்தை கமிஷனர் அளந்து முடித்தாரா என்றால் முடித்துவிட்டார். எனது ஓனரை நான் தள்ளிவிட்டதாக சொல்லப்படும் இடம் மண்தரையா, ரோடா என்றால் படிக்கட்டு. அவருக்கு காயம் எதுவும் ஏற்படவில்லையா என்றால் இல்லை. சிராய்ப்புக்காயம் ஏதும் ஏற்படவில்லையா என்றால் இல்லை.

மறுவிசாரணை.- இல்லை.

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUCHENGODE
**CC.No. 246/2019**

Deposition of Prosecution/Defence/Court Witness for.PW.3

Name : வடிவேல்

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act of 1969) on the day of 28.07.2021.

முதல் விசாரணை:

நான் கரட்டுப்பாளையத்தில் குடியிருக்கிறேன். இரும்பு வியாபாரம் செய்கிறேன். ஆஜர் எதிரி மகேந்திரனைத் தெரியும். எதிரி கன்னியப்பனை தெரியும், பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். அ.சா.1, 2 ஐ தெரியும். அ.சா.1 எனது நடு தாத்தா மகன் ஆவார். 27.10.2018 ம் தேதி கிழக்கு ரத வீதியில் உள்ள எங்களுக்கு சம்பந்தப்பட்ட கட்டிடத்தை அளக்க கோர்ட் கமிஷனர் வருவதாக சொன்னார்கள். அதற்காக 10.00 மணிக்கு நானும், கணேசன், கோபால், ரமேஷ், மோகன் ஆகியோர் சென்றிருந்தோம். போய் கட்டிடத்தின் முன் பார்த்த போது கட்டிடம் சேதப்படுத்தப்பட்டிருந்தது. கதவுகள் உடைக்கப்பட்டிருந்தது. அங்கு எதிரிகள் இருவரும் இருந்தார்கள். எதிரிகள் அ.சா.1 ஐ பார்த்து உன்னால் தான் இவ்வளவு பிரச்சினை என்று சொன்னார்கள். உன்னை வெட்டினால் சரியாக போய்விடும் தேவடியா பையா என்று கெட்ட வார்த்தையால் திட்டினார்கள். எதிரி மகேந்திரன் அருவாளை எடுத்து அ.சா.1 ஐ வெட்ட வந்தார். கோபால் , மோகன் இருவரும் எதிரி மகேந்திரனை பிடித்துக்கொண்டார்கள். இது நடந்து முடியும் தருவாயில் சர்வேயர், கோர்ட் கமிஷனர் முனிராஜ், விஏஓ, போலிசார் வந்தனர். அவர்கள் வந்ததும் பதட்டமான சூழ்நிலை விலகிவிட்டது. கமிஷனரிடம் 2 வது எதிரி மகேந்திரன் கட்டிடத்தை நீங்களே சேதப்படுத்திவிட்டு அளக்க வந்துள்ளீர்களா என்று கேட்டார். உடைத்த கட்டிடத்தை எப்படி அளப்பீர்கள் என்று கேட்டு வாக்குவாதம் பண்ணிக்கொண்டிருந்தார். நடப்பதை ரமேஷ் வீடியோவாக பதிவு செய்தார். எதிரி கன்னியப்பன் ரமேஷையும் கெட்ட வார்த்தையால் திட்டி ரமேஷை கையால் ஓங்கி அடித்தார். எதிரி மகேந்திரன் ரமேஷை தள்ளிவிட்டார், மொபைல் கீழே விழுந்துவிட்டார். ரமேஷ் எடுத்த வீடியோவை சிவில் கோர்ட்டில் தாக்கல் செய்துள்ளார்கள். ஏன் இவ்வாறு செய்கிறீர்கள் என்று நான் எதிரிகளிடம் கேட்டதற்கு கமிஷனர் வந்தாலும், போலிஸ் வந்தாலும் அளக்கவிடமாட்டேன்,

என்று சொல்லி பழக்கடைக்கு ஓரமாக இருந்த அருவாளை எடுத்து விரட்டினார். 1 வது எதிரி , 2 வது எதிரியை பார்த்து மகேந்திரா நீ விட்டுவிடு அளந்தா அளந்துட்டு போகட்டும், நான் கோர்ட்டில் பார்த்துக்கிறேன், அளந்துட்டா பிரிச்சிட முடியுமா என்று சொன்னார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை.-

சம்பவ இடத்தில் அமைந்துள்ள தாவா கட்டிடத்தில் எதிரிகளுக்கும் உரிமை உள்ளதென்றால் உரிமை உள்ளது. ஆனால் சிவில் வழக்கு நிலுவையில் உள்ளது. எந்த தேதியில் கமிஷனர் அளப்பதற்காக வந்தார் என்றால் 27.10.2018 ம் தேதி காலை 10.00 மணிக்கு வந்தார். நாங்கள் எத்தனை மணிக்கு அங்கு சென்றோம் என்றால் 9.55 அல்லது 10.00 மணிக்கு அங்கு சென்றிருப்போம். கமிஷனர் எத்தனை மணிக்கு அங்கு வந்தார் என்றால் நாங்கள் அங்கு சென்று 10 நிமிடங்களில் அங்கு வந்தார். 10.10 க்கு வந்திருப்பாரா என்றால் 10.00, 10.05 க்கு வந்திருப்பார். கமிஷனரும் , போலிசாரும் வந்தபோது எதிரிகள் அருவாளை எங்கு வைத்தார்கள் என்றால் நான் பார்க்கவில்லை. நான் எனது முதல் விசாரணையில் பழக்கடையின் சைடில் வைத்திருந்த அருவாளை எடுத்து எதிரிகள் விரட்டியதாக சாட்சியமளித்துள்ளேன். அந்த சமயத்தில் கமிஷனர், போலிசார், விஏஓ அங்கிருந்தார்களா என்றால் அங்கிருந்தார்கள். போலிசார் பாதுகாப்புக்காக தான் அங்கு வந்திருந்தார்கள் என்றால் சரிதான். எதிரிகள் அவ்வாறு அருவாளை எடுத்து வெட்ட வந்தபோது போலிசார் என்னசொன்னார்கள் என்றால் ஒருமுறை எச்சரித்துவிட்டோம், திரும்பவும் இதே போல் செய்தால் அரெஸ்ட் பண்ணுவதை தவிர வேறு வழியில்லை என்று சொன்னார்கள். போலிசார் அளக்கவேண்டுமா, வேண்டாமா என்று இருதரப்பினரிடமும் கேட்டார்கள், நாங்கள் அளக்கவேண்டும் என்று சொன்னோம். எனவே இருதரப்பினரையும் அமைதியாக இருக்கும்படி சொன்னார்கள். அப்படி இருந்தால் தான் அளக்கமுடியும் என்று சொன்னார்கள். சம்பவ சமயத்தில் இருதரப்பு வழக்கறிஞர்களும் இருந்தார்களா என்றால் எங்கள் தரப்பு வழக்கறிஞர் இருந்தார். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முக்கால் மணி நேரம் தாமதமாக வந்து வந்ததும், கமிஷனரிடம் பிரச்சினை செய்ய ஆரம்பித்தார். எதிரிகளின் வழக்கறிஞர் பிரச்சினை செய்த போது கோர்ட் கமிஷனர் முனிராஜா சம்பவ இடத்தை பார்வையிட்டு அளப்பதற்கான நீதிமன்ற உத்தரவை எதிரிகள் வழக்கறிஞரிடம் காட்டினாரா என்றால் எனக்கு தெரியாது, நான் பார்க்கவில்லை.

மறுவிசாரணை.- இல்லை.